# செய்தி மடல்

**NEWSLETTER - SEPTEMBER 2010**


தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ் Tamil Study Centre, Homebush Inc.
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au


## பாடசாலை விடுமுறை தினம் - 18.09.2010

பாடசாலை விடுமுறைகாலத்தில் இடம்பெறவுள்ள கட்டிட திருத்தவேலை காரணத்தால், எமது தமிழ்க் கல்வி நிலையம் 18ம் திகதி செப்டம்பர் மாதம் 3ம் தவணைக்கான விடுமுறை நாளாக அறியத்தருகின்றது.

## வாணி விழா – 30.10.2010

வருடா வருடம் எமது தமிழ்க் கல்வி நிலையம் முப்பெரும் தேவியர்களை வழிபட்டு நவராத்திரி தினத்தில் விழாக் கொண்டாடுவது வழக்கம். இம்முறை எம் கல்வி நிலைய வாணிவிழா 30ம் திகதி ஒக்டோபர் மாதம் பி.ப. 4:00 மணிக்கு கலைமகளுக்கான பூஜை வழிபாட்டுடன் ஆரம்பமாகி, கல்வி நிலைய மாணவர்களின் பல கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்புறவுள்ளது. இவ் வைபவத்திற்கு வருகைதந்து முப்பெரும் தேவியர்களின் அருளைப் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இவ்விழாவினைச் சிறப்பித்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவவிரும்பும் அன்பர்கள் தயவுசெய்து உங்கள் பங்களிப்பை $10 செலுத்தி எமக்கு ஆதரவுதருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.







## அமைச்சர் விருது 2010

அண்மையில் இடம்பெற்ற அமைச்சர் விருது வைபவத்தில் எமது பாடசாலை மாணவி **செல்வி ஆர்த்திகா சிற்சபேசன்** (மேற்பிரிவு), மதிப்பிற்குரிய அமைச்சர் Verity Firth இடம் இருந்து 2010ம் ஆண்டிற்கான அமைச்சர் விருதினைப் பெற்றுள்ளார். இவ்வைபவத்தில் **செல்வி ஹரதர்சனா கண்ணன்** (கீழ்ப்பிரிவு) சிறப்பு விருதினை பெற்றுள்ளார். இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த பரிசுகளைப்பெற எமது மாணவர்கள் எடுக்கும் முயற்சிக்கும், இதில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் எமது கல்வி நிலையம் பாராட்டைத் தெரிவிக்கின்றது. இவ்வைபவம் 06.09.2010 அன்று University of New South Wales இல் சிறப்பாக இடம்பெற்றது.

## பேச்சுப்போட்டி பரிசளிப்புதினம் - 11.12.2010

இம்முறை இடம்பெற்ற தமிழ் பேச்சுப்போட்டியில் அதிக மாணவர்கள் மிக ஆர்வத்துடன் பங்குபற்றி பரிசில்களைப் பெறவுள்ளார்கள். இவர்களுக்கான பரிசில்கள் 11ம் திகதி டிசம்பர் மாதம் வழங்கப்படும்.

## HSC Exam 2010

இம்முறை இடம்பெறவுள்ள HSC பரீட்சைக்கு எமது கல்விநிலையத்தில் பயிலும் 23 மாணவர்கள் தோற்றவுள்ளார்கள். இவர்களை உரியமுறையில் பயிற்றுவித்து தமிழை TWO UNITS பாடமாக எடுப்பதற்கு தயார்படுத்திய தமிழ்க் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும், தமிழ் அறிவை வளர்க்கும் மாணவர்களுக்கும் எமது கல்விநிலையம் பாராட்டைத் தெரிவிற்பதுடன், இம்மாணவர்களுக்கு பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகின்றது. சென்ற வருடம் எமது கல்வி நிலையத்தைச் சேர்ந்த 11 மாணவர்கள் Band 6 இலும் 15 மாணவர்கள் Band 5 இலும் சித்திபெற்றது குறிப்பிடத்தக்கது.

## NSW Federation of Community Language Schools – Annual Dinner 2010

கூட்டமைப்பினால் நடாத்தப்பட்ட இராப்போசன விருந்தில் அனைத்துப் பாடசாலைகளும் கலந்து கொண்டு இவ்வைபவத்தை சிறப்பித்தனர். இவ்விருந்து வைபவம் Croation Club, Punchbowl இல் அண்மையில் இடம்பெற்றது. இதற்கு பல அரசியல் தலைவர்களும் வருகைதந்திருந்தார்கள். பல்லினக் கலாசாரத்தை வெளிப்படுத்துமுகமாக பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இதில் எமது கல்விநிலைய மாணவர்கள் இரு நடன நிகழ்சிகளை வழங்கி அனைவரது பாராட்டையும் பெற்றார்கள். இம் மாணவர்களுக்கும், இந்நிகழ்ச்சியை தாயரித்து வழங்கிய Dr.யசோதரபாரதி சிங்கராயர் அவர்களுக்கும், இந்நிகழ்ச்சியை மேடையேற்ற ஆதரவாக இருந்த அனைவருக்கும் எமது கல்வி நிலையம் நன்றியைத் தெரிவிக்கின்றது.

## பாடற்குழு – சீருடை (choir uniform)

பாடல் குழுவில் உள்ள புதிதாக சேர்ந்த மாணவர்கள் உட்பட, பாடற்குழுவிற்கான சீருடையினைப் பெறவிரும்பின், அலுவலகத்தில் உள்ள அங்கத்தவரிடம் பணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

## பாடசாலைக் கட்டணம்

தமிழ்க் கல்வி நிலையத்தின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கம் தரும் பணத்தை விட அதிகமாகத் தேவைப் படுவதால், பெற்றோர்கள் தயவு செய்து பாடசாலைக் கட்டணத்தை முன்கூட்டியே செலுத்துமாறு நிர்வாகக் குழுவினர் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

## ஞாயிறு தமிழ்ப் பாடசாலை

பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கும், பாடசாலைப் படிப்பை முடித்தவர்களுக்கும், மற்றும் வளர்ந்தவர்களுக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை தமிழ்ப் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. இதனால் இளைஞர்கள் தமிழை கற்பதற்கு மிகவும் வசதியாக உள்ளது. மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

## இணையத்தளம்

எமது கல்வி நிலைய இணையத்தளம் multimedia வசதிகளைக் கொண்ட ஒரு இணையத்தளமாக வலுப்பெற்றுள்ளது. மாணவர்களின் தரமான ஆக்கங்களை video, audio வடிவத்திலும் தரக்கூடியதாக உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**www.tsch.org.au**
**info@tsch.org.au**

## ANNUAL DINNER 2010 - NSW Federation of Community Language Schools

Cultural Dance performed by students from Tamil Study Centre Homebush and produced by Dr.Yasothara Singarayar. Political leaders, NSW FCLS president and Tamil School Principal, President, Secretary also in the photo below.

மூன்றாம் தவணை நிறைவு – 18.09.2010
நான்காம் தவணை ஆரம்பம் – 16.10.2010

## முக்கிய தினங்கள்

16.10.10 – நான்காம் தவணை ஆரம்பம்
23.10.10 – **No School due to Strathfield Council By-Election**
04.12.10 – ஆண்டிறுதிப் பரீட்சை
18.12.10 – பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு
18.12.10 – பரிசளிப்பும் இராப்போசன விருந்தும்
18.12.10 – 4ம் தவணை நிறைவு நாள்

**Ministers Award 2010**




Aarthiekaa Sitsabesan received a Ministers Award 2010 from The Hon. Verity Firth MP, Minster for Education and Training at Sir John Clancy Auditorium, UNSW on 6 September 2010.

